**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 1/2011 |
| Deposition of Witness for | : | PW1 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திருமதி. பில்லாத்தாள் |
| Husband's name | : | திரு.பூசாரி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 03rd Day of February 2026.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 29.11.1971ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட ஒப்படைவு உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆக்கரமிப்பு

அகற்றம் குறித்து வெளியீடப்பட்ட பத்திரிக்கை செய்தி **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து சம்மந்தமான 01.01.1989 முதல் 05.02.2003 வரையான காலத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து எனது பெயரில் உள்ள கிரைய ஆவணம் ஆவண எண்.219/2004 அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பட்டா புத்தகம் கேட்டு 19.04.2004ம் தேதி கிராம நிர்வாக அலுவலருக்கு வழங்கிய மனு நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.